புத்தகம் ௧௧] -௨- [ஸஞ்சிகை ௨.

ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

**लक्ष्मीशाखिललोकपालक कृपासिन्धो त्वदाज्ञाभिध-**
**प्राचीनामलधर्मकल्पलतिकाप्रोन्मूलनायाधुना ।**
**केचित्सन्ति धृतोद्यमा इति विभो जानन्नपि त्वं भृशं**
**किं मौनं भजसे न चिन्तयसि किं गीताकृतं सङ्गरम् ॥**

**उपपत्राधिपः ।**

ஸகல லோகங்களையும் பாதுகார்ப்பவராயும், கருணைக் கடலாயும் விளங்கும் ஹே லக்ஷ்மீபதே! தற்காலத்திய சிலர் உமது ஆக்ஞையென்று பெயர்கொண்ட ஸநாதனதர்மமென்னும் கல்பகலதையை வேருடன்பிடுங்கவேண்டி அதிக முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்கிற விஷயத்தை வியாபகரான ஹே விஷ்ணோ! நீர் நன்கு அறிந்தும் ஏன் மௌனமாயிருக்கிறீர்? கீதையில் செய்யப்பட்ட பிரதிக்ஞை ஞாபகத்திலில்லையா ?

ஒரு ஆஸ்திகர் அடியில்வருமாறு பகவானிடம் பிரார்த்திக்கிறார். "ஹே லக்ஷ்மீகாந்த! மூவ்வுலகங்களையும் ரக்ஷிப்பது உமது கடமையாக இருக்கிறது. அந்த லோகக்ஷேமத்திற்கு உமது ஆக்ஞாரூபங்களான தர்மங்களின் அனுஷ்டானம் முக்கியகாரணம். எவ்வித பலத்தையும், அளிக்கும் சக்திவாய்ந்த இந்த தர்மங்களை சிலர்தாங்கள் அனுஷ்டிக்காமலிருப்பதுமன்றி அனுஷ்டிப்பதில் சிரத்தைகொண்டவர்களையும் அனுஷ்டிக்கக்கூடாதென்று பலவாறான ஆபாஸயுக்தியைச்சொல்லி சாஸ்திரங்களில்நம்பிக்கையில்லாமலிருக்கும்படி தாறுமாறாய்த்தோன்றியபடி எல்லாம்சொல்லிதர்மத்தைக்கெடுக்கிறார்கள் என்பதை நீர் நன்கு அறிந்தும் முன்னமேயே கீதையில் **"यदा यदा हि धर्मस्य"** என்றெந்தக்காலத்தில் தர்மத்திற்கு அற்பம் குறைவேற்படுகின்றதோ அவ்வக்காலத்தில் நான் அவதரிக்கிறேன் என்று பிரதிக்ஞை செய்திருந்தும் ஏன் உதாஸீனமாயிருக்கிறீர்? முன்செய்த பிரதிக்ஞை ஞாபகமில்லையா? சீக்கிரத்தில் உலகில்தோன்றி தர்மத்தை சரியாய்ஸ்தாபனம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
குரோதன-௵ தை-௴ ௮௨

# காலத்தின் கொடுமை.

தற்காலம் நம் ஸநாதனதர்மத்திற்கு நேர்ந்திருக்கும் கஷ்டங்களைக் கடவுளாலும் கூறவியலாது. லௌகிகமான ஒரு காரியத்தில் தங்களுக்கு அற்பம் பிரவேசம் கிடைத்துவிட்டால் அதைக்கொண்டு தங்களிடம் விசேஷயோக்கியதை இருப்பதாயும், தங்களுக்குத் தெரியாத விஷயம் ஒன்றுமில்லை என்றும், சகல தர்மங்களையும் சகல சாஸ்திரங்களையும் தாங்களே நன்கறிந்துகொண்டிருப்பதாகவும் தாமாகவே நன்கு தீர்மானம் செய்துகொண்டு எதையும் தைரியமாய்ச் சபைகளிலும் பேபர்களிலும் வெளியிட முன்வருகிறார்கள். ஈசுவராவதாரமெனப் போற்றக்கூடிய மகிமை பெற்ற மனு, யாக்ஞவல்கியர், பராசரர் முதலான மஹான்களும் தர்மங்களை விவரிக்குமிடத்தில் மிகவும்பயந்து 'சாஸ்திரங்கள்கூறுகின்றன' எனத் தெரிவித்து,

धर्मस्यतत्वं निहितं गुहायां महाजनो येन गतस्सपन्था: ।

இது தர்மம், இது அதர்மம் என்கிற உண்மையானது வேதங்களில் மிகவும் ரகஸ்யமாய் வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் எங்களாலும் அது பூராவாகக் கண்டுபிடித்து எழுதப்படவில்லை; எழுதியிருக்கும் சில பாகங்களை வைத்துக்கொண்டு மஹான்களின் அனுஷ்டான முறைகளையும் நன்கு கவனித்து அவ்விதம் நடத்தவேண்டுமென்று தாங்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமல் இவ்விதம் வெளியிட்டிருக்கிறார்கள். இப்பொழுது தர்மங்களைச் சரியாய் நிலை நாட்டி லோக க்ஷேமத்தை யுண்டுபண்ணவேண்டுமென்கிற கருணையுடன் முன் வந்திருக்கும் கலிகால மஹரிஷிகளுக்குச் சித்தத்தில் எதெதை எவ்விதமனுஷ்டிக்கவேண்டுமென்று

தோன்றுகிறதோ அதுவே தர்மம். அதுவே சாஸ்திரார்த்தம் என்று,

आत्मनः प्रतिभात्वासीदागमाच बलीयसी ॥

'தங்களுடைய புத்தியே வேதங்களைக் காட்டிலும் சிறந்த பிரமாணம்' என்கிற நிச்சயங்கொண்டு அவ்விதமே ஸ்தாபிக்க முன் வருகிறார்கள். அந்தோ! இவ்விதம் மொழிவது சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கின்றதென்று எவராகிலும் ஆக்ஷேபித்தால் "நீங்கள் கூறும் ஸ்மிருதிகளை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை" என்றும் "வேதப்பிரமாணம் வேண்டும்" என்றும் அதிலும் விதிவாக்யமாக வேண்டும் என்றும்; அவ்விதமே ஒரு சமயம் கிடைத்தாலும் "ரிக் வேதம்தான் வேதம், அதிலிருக்கவேண்டும்" என்றும்; அதிலும் ஒரு சமயம் இருந்தால் "இது வேதத்தில் சேர்ந்ததல்ல, யாரோ இப்பொழுது அச்சுப்போடும் பொழுது சேர்த்திருக்கிறார்கள், நம்பமாட்டோம்" என்றும்; பலவாறாகக் குதர்க்கம் செய்து அதையும் அங்கீகரிப்பதில்லை. நிக்ரஹானுக்கிரஹ சக்திவாய்ந்த மஹான்களுடைய வாக்கைச் "சரியல்ல" வென்றும், அதை 'நம்பமாட்டோம்' என்றும் கூறும் இவர்கள் தங்கள் வாக்கைப் பிரமாணமாக நம்பும்படி தைர்யமாய் எப்படிப் பிறர்களுக்கு உபதேசிக்கிறார்களோ தெரியவில்லை. மனு, வஸிஷ்டர், யாக்ஞவல்கியர் முதலானவர்களைக் காட்டிலும் எந்த விஷயத்தில் இவர்கள் மேலானவர்களென்று தங்களைக் கருதி இருக்கிறார்களோ? ஒரு ஸமயம் அகங்காரத்தினாலும் அக்ஞானத்தினாலும் சிறந்தவர்களாயிருக்கலாம். இவைகள் தர்ம வியவஸ்தை செய்வதற்கு அற்பமேனும் தகுதியல்லாதவை என்பதும் வெளிப்படையே. சகல தர்மானுஷ்டானங்களுக்கும் மூலகாரணமான நம் சுருதி, ஸ்மிருதி, புராணங்களில் நாஸ்திகர்களைப் போல் அவநம்பிக்கைகொண்ட இவர்கள் "லோகத்திற்கு உபகாரம்" செய்கிறோம் என்று பறைபறைந்துகொண்டு முன் வந்து கொஞ்சகாலமாய் நம் ஸநாதன தர்மத்தை அடியோடகற்றவேண்டிச் செய்யும் கார்யங்கள் பலவாகும்.

(தொடரும்.)

உபபத்திராதிபர்.

# வ ர ரு சி.

மஹா மேன்மைதங்கிய இம்மஹா புருஷர் யார்? எந்நாட்டில் ஜனித்தவர்? இவருடைய பிறப்பால் எந்தக்குலம் சிறப்பிக்கப்பட்டது? அவருடைய முயற்சி எத்தன்மையானது? எப்போது இவர் இம்மண்ணுலகை யலங்கரித்தார்? எந்த குருகுலத்தில் இவரால் கலைமகளின் அநுக்கிரஹம் அடையப்பட்டது? சப்த சாஸ்திரத்தில் இவருக்கு ஒப்பில்லாத் திறமை எப்படி ஏற்பட்டது? எந்தப் பிரபாவத்தால் இவருக்கு பாணிநிஸூத்திரங்களுங்குப்பரிஷ்காரம் செய்யும் சக்தியேற்பட்டது? இவருடைய இல்லாள் யார்? தோழர்கள் யார்? எந்த அரசனுடைய சபை இவரால் பிரகாசப்படுத்தப்பட்டது? இவருக்கு உலகநடையின் அறிவு எவ்விதமானது? இது முதலானதை அறிவதற்கு, முனிவர்கள் மூவரையும் தினந்தோறும் வணங்கிவிட்டு, பாணிநீயமான இலக்கணத்தைக் கற்றுக்கொள்பவர்கட்கு ஆவலிருக்கும் என்றே எண்ணுகிறோம்.

வார்த்திகத்தை இயற்றியவரான இந்த வரருசி, முன்காலத்தில் சராசரங்களுக்குக் காரணரான உமாகாந்தரின் பிரிய பாத்திரர்களான பிரமதகணங்களில் ஒருவரும், பெயரால் புஷ்பதந்தர் எனப்படுவரும், பரமேச்வரனின் அனுக்கிரஹ பாத்திரமானவராயும் இருந்தார். ஒருசமயம் பார்வதிகாந்தனை ஸேவிக்கவந்த இவர் 'ஒருவரும் உள்ளே பிரவேசிக்கக்கூடாது' என்று நந்திகேச்வரரால் தடுக்கப்பட்டபோதிலும், ஆவலோடுகூடினவராய், யோக மஹிமையால் காணப்படாமல் உள்ளே நுழைந்து, பர்வதராஜ குமாரியின்பொருட்டு பரமேச்வரனால், அன்பால் மதுரமாயிருக்கும்படி வர்ணிக்கப்படும், முன்கேட்டிராத வித்தியாதரர்களின் சரித்திரத்தைக்கேட்டார். செவியுற்று வெளியில்வந்தவராய் ஆச்சரியத்துடன் தன்மனைவிக்குப் பூர்ணமாக அக்கதையைச் சொன்னார். ஆச்சரியப்பட்டவளும், பார்வதியின் வாயற்காப்பவளுமான ஜயையென்ற அவளும் யஜமானியின் முன், கேட்டபடியே வித்தியாதரர் சரித்திரத்தைக் கூறினாள். பார்வதிதேவி அதைக்

கேட்டு உடனேயே சங்கரனையடைந்து, 'அபூர்வமானது என்று உம்மால் வர்ணிக்கப்பட்ட சரித்திரத்தை ஜயையும் அறிந்திருக்கிறுள்' என்று கோபத்துடன் உரைத்தாள். உமாகாந்தனும், தியானதிருஷ்டியால் நடந்தவரலாற்றை அறிந்து 'நேசியே தெரியாமல் நுழைந்த புஷ்பதந்தனுல் இக்கதை கேட்கப்பட்டு மனைவிக்கும் கூறப்பட்டது என்று பகர்ந்தார். உடனேயே "மானிடத்தன்மைக் கியல்பான ஆவலால் கலங்கின இந்த புஷ்பதந்தன் மனுஷ்யலோகத்தில் வஸிக்கத்தகுதியுள்ளவனுகிறுன்" என்று உமாதேவியால் சபிக்கப்பட்டவராய், பூலோகத்தை அவசமாயடைந்து, பாரதவர்ஷத்தில் கௌசாம்பி நகரத்தில் வஸுதத்தை என்ற தர்மபத்தினியோடு இல்லறத்தை நடத்திவரும் ஸோமதத்தன் என்று பெயர்பூண்ட ஓர் பிராமணனுக்குப் புதல்வரானுர்.

குற்றங்குறை அறியத்தகாத இளம்பிராயத்தில் இருக்கும்போதே அவருடைய தகப்பனுர் விண்ணுலகஞ்சேர்ந்தார். அன்னை மிகுந்த சோகத்தால் கலங்கினவளானுலும், தைரியத்தையடைந்து சிரமத்துடன் குழந்தையை வளர்த்துக்கொண்டும், வறுமையால் பிடிக்கப்பட்டவளாயிருந்தாலும் பிள்ளையின் க்ஷேமத்தைக் கருதியவளாய் சக்திக்குத்தக்கவாறு பலிகளாலும், விருந்தாலும், தெய்வங்களையும், விருந்தாளிகளையும் சந்தோஷப்படுத்திவந்தாள். சிறுவனும் துக்கவிருத்தாந்தம் ஒன்றுமறியாதவனுய்ப் பட்டணத்தில் ஆங்காங்கு நடக்கும் ஸபைகளிலும், ஸங்கீத கோஷ்டிகளிலும் எதெதைக் கேட்கின்றுனே அவ்வனைத்தையும் சக்திக்குத்தக்கவாறு அன்னையிடம் வர்ணித்துக்கூறவே, அவளால் சந்தோஷத்தோடு உச்சிமுகர்ந்து களிக்கப்பட்டவனுய் வளர்பிறைச் சந்திரன்போல் வளர்ந்தும்வந்தான். ஒருசமயம் வியாடி, இந்திரதத்தன் என்ற இரண்டு பிராமணர்கள் பூமியில் அலைந்துகொண்டு, ஒருநாளிரவு கழிப்பதற்கு அவ்வில்லத்திற்கு வந்தவர்களாய் ஒரு தடவையே கேட்ட யாவற்றையும் மனதில் தரிக்கும் இப்பாலகனைக்கண்டு ஆச்சரியப்பட்டவர்களாய், பரீக்ஷை பார்ப்பதற்காக ஒரு தடவை ஓதப்பட்ட பிராதிசாக்யத்தை உடனேயே அனுஸரித்துச்சொன்ன அவனை, உண்மையாகவே இவன் ஏகஸந்தாக்ராஹி என்று நிச்சயித்தவர்களாய், வஸுதத்தையை வணங்கிச்

சொல்லலானார்கள்—"ஓ பதிவிரதையே, இவன் ஸாதாரணமான பாலனல்லன். இவ்விதமான பாலனைத் தேடிக்கொண்டே இங்கு நாங்கள் அலைந்துகொண்டிருக்கிறோம். வைதஸபுரியென்பது எங்களுடைய ஜன்மதேசம். இளம்பிராயத்திலேயே தந்தையை விட்டுப்பிரிந்து, நாதனில்லாமல், தந்தையால் தேடப்பட்ட ஏராளமான செல்வத்தால் வறுமையறியாதவர்களாய் வித்தியா தனத்தை விரும்பிக்கொண்டு ஏகாக்ரமான தவத்தால் ஆராதிக்கப் பட்ட ஸ்வாமியான குமாரக்கடவுளால்'நந்தனுல்பரிபாலிக்கப்பட்ட பாடலிபுரஞ்சென்று, வர்ஷர் என்ற பிராமண சிரேஷ்டரிடமிருந்து கல்வியைப் பெறுங்கள்' என்று கனவில் ஏவப்பட்டவர்களாய் அப்பட்டணத்தையே அடைந்தோம். இப்பெரிய நகரத்தில் எங்கே வர்ஷர் காணப்படுவாரோ என்று மனங்கலங்கினவர்களாய் 'பிராமணகுலத்தில் பிறந்த வர்ஷர் என்ற ஒரு முட்டாள் இருக்கிறார்' என்று ஓரிடத்தில் பேசிக்கொள்ளும் ஜனக்கூட்டத்தில் இருந்து தெரிந்துகொண்டு, ஓர் மூலையில் எலிவளைகள் நிரம்பினதும், இடிந்த சுவறுகளுள்ளதும், கூரையற்றதும், வாஸம்செய் யத்தகாததும், ஆபத்துக்களுக்குப் பிறந்த பூமிபோன்றதுமான ஓர் இல்லத்தைக்கண்டோம். அங்கு தியானநிஷ்டரான வர்ஷரைக்கண்டு, அருகிலுள்ளவளும், அழுக்குற்று இளைத்த சரீரம் உள்ளவளும், கிழிந்த அழுக்காடையுள்ளவளும், அவர் குணத்தில் ஆசையோடுவந்த உருவங்கொண்ட தூர்க்கதிபோன்றவளுமான, அவருடைய மனைவியை நமஸ்கரித்து, உள்ளபடி எங்கள் வரலாற்றைச் சொன்னோம். அவளோவெனில், ஆதரவுடன் சொன்னதாவது—"பிள்ளைகாள், இந்நகரில் சபாஸ்வாமியென்ற பிராமண சிரேஷ்டரிருந்தார். அவரிடமிருந்து முட்டாளும் ஏழையுமான இந்த வர்ஷரென்ற பிள்ளை யுண்டானார். புத்திசாலியும் பிரபுவுமான இவருடைய தம்பிபெயரால் உபவர்ஷர் எனப்படுவர். ஒருசமயத்தில் இவர் தம்பியின் மனைவியால் கொடுக்கப்பட்ட தக்ஷிணையோடுகூடின வெறுக்கத்தகுந்த தானத்தை வாங்கிக் கொண்டு, என்னிடம் வந்தபோது என்னால் வெகுவாய் நிந்திக்கப் பட்டவராய், வைராக்கியத்தோடு ஸ்வாமியான குமாரக்கடவுளைத் தவத்தால் சந்தோஷப்படுத்தி, அவரது அனுக்கிரஹத்தால் சகல

வித்தைகளையும் அறிந்தார். 'ஏகஸந்தாக்ராஹியான மாணுக்கனை யடைந்து முதன்முதலில் இவ்வித்லைதகளை நீ பிரகாசப்படுத்த வேண்டும்' என்று வேலாயுதரால் ஆஜ்ஞாபிக்கப்பட்டவராய்க் கொண்டு அப்புருஷனையடையாமல் இரவும்பகலும் ஜபித்துக் கொண்டும், தியானித்துக்கொண்டும் இருக்கிறார். ஆகையால் அவ்விதமான ஒருபுருஷன் தேடப்படட்டும்" என்று அறிவித்தாள். பிறகுஏழ்மைதொலைவதற்குஅவளுக்குநூறுபொன்னைக்கொடுத்து விட்டுப் பயணப்பட்டவர்களாய் பூமியனைத்திலும் அலைந்துகொண்டு ஓரிடத்திலும் அவ்விதமான பாலகனை அடையாதவர்களாய் துக்கத்தின்கடைசிஎல்லையை அடைந்தவர்களாய்க்கொண்டுஇங்கு தெய்வச்செயலாய் ஒருதடவை சொன்னதை தரித்துக்கொள்ளும் சக்திவாய்ந்த (सकृच्छ्रुतधरं) இப்பாலகனைக்கண்டோம். வித்தைகளை அறிந்துகொள்வதற்கு இக்குமாரனைவிட்டுவிடவேண்டும்" என்று, இவ்விதம் அவ்விருவர்களின் வார்த்தையைக்கேட்டு ஆதரவுடன் அவ்வன்னை, "அப்படியே செய்யப்படட்டும். இவன் ஜனிக்கும்போதே 'கேட்டதை அப்படியே தரித்துக்கொள்கிற (श्रुतधर) இவன் வர்ஷரிடமிருந்து வித்தையை அடையப்போகிறுன். மேலும், வியாகரணத்தை உலகில் ஸ்தாபிக்கப்போகிறுன்' இவன் பெயரால் வாருசியெனப்படுவான். எதெது வரமாக ஆகுமோ அதது அல்லவோ இவனுக்கு ருசிக்கிறது. அதையனுசரித்தே, நீங்களும் வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு சந்தோஷத்துடன் பாலகனை அவர்கள் கையில் ஒப்புவித்தாள்.

வியாடியானவர் அப்பையனை அழைத்துக்கொண்டு மிகுந்த சந்தோஷத்தையுண்டாக்கி, வனுதத்தைக்குப் போதுமான செல்வத்தை அளித்து, கண்ணீர்விடும் அவளுடைய அனுமதியைப் பெற்று, வாருசியோடும், மஹேந்திரதத்தனேடும் பாடலிபுரம் அடைந்தான். வர்ஷோபாத்தியாயரின் கிரகத்தையுமடைந்தான். 'இவனே (सकृच्छ्रुतधरः) ஒரேதடவையில் கேட்டவைகளைத் தரிப்பவன்' என்று அறியப்படுத்தப்பட்ட வர்ஷர் பாலகனை, சந்தோஷம் நிரம்பினவைகளும் உபவாஸமிருந்தவைகள் போன்றவையுமான நேத்திரங்களால் அன்புடன் பார்த்து 'வருக வருக' என்று

கெட்டியாய்த்தழுவி, தாமதிக்காமலே சுத்தமான தரையில் உட்கார்த்தி, பிரஸன்னமாயும் கம்பீரமாயுமுள்ள தேவபாஷையால் ஓங்காரத்தை முன்னிட்டு அங்கங்களோடுகூடின வேதங்களை ஓதிவைப்பதற்குத் தொடங்கினர். ஒருதடவை கேட்டதால், வாருசியும் இரண்டு தடவை கேட்பதால், வியாடியும் மூன்று தடவை கேட்பதால் இந்திரதத்தனும் ஆசிரியரால் கூறப்பட்டதை அறிந்தார்கள். முன்கேட்கப்படாததும், அதிகாச்சரியமானதும், வர்ஷருடைய பாழ்வீட்டிலிருந்து பூமியையும் ஆகாயத்தையும் வியாபிப்பதும், திவ்வியமுமான த்வனியைக்கேட்டு, ஆச்சரியத்தால் அசையாத கண்ணேடுகூடினவர்களும் உபவர்ஷரோடுகூடினவர்களுமான பட்டணத்து ஜனங்கள், வர்ஷோபாத்தியாயரின் மாஹாத்மியத்தைப் புகழ்ந்துகொண்டு பட்டணமெங்கும் மஹோத்ஸவத்தைக் கொண்டாடினர்கள். நந்தராஜனும், குமாரக்கடவுளின் வரத்தின் மஹிமையால் ஏற்பட்ட அந்த விசித்திரமான வாக்கின் விலாஸத்தைக்கண்டு வர்ஷரின் வீட்டில் ஏராளமான செல்வத்தை வர்ஷித்தான்.

இவ்விதம் நாட்கள் செல்லுகையில், குருகுலத்தில் வசிக்கும் வாருசி கிரமமாய் இளம்பிராயஞ்சென்று, கல்விக்கடலின்கரையை அடைந்தார். பிறகு ஓர் சமயத்தில் இந்த வாருசி, வியாடியோடும், இந்திரதத்தனேடும் இந்திரோத்ஸவத்தைப்பார்க்க வெளிக்கிளம்பினவராய் ஓரிடத்தில் ஸகல பூஷணங்களணிந்துகொண்டவளும் காமனுடைய ஜயக்கொடிபோன்றவளும் உருவங்கொண்டு ஸஞ்சரிக்கும் லக்ஷ்மிதேவிபோன்றவளும், மிருதுவான சரீரமுள்ளவளும், தோழிகளோடு விநோதப்பேச்சால் தன்னைச் சிறப்பித்துக்கொள்கிறவளும், முன் பார்க்கப்பட்டிராதவளுமான கன்னிகையைக்கண்டார். கண்டமாத்திரத்திலேயே அவள், மன்மதபாணத்தால் பிளக்கப்பட்ட அவன்மனத்தில் நுழைந்தாள். சூன்னியமான மனத்தினையுடைய வாருசி அவளை நினைந்துகொண்டு தோழனே! யாதொரு இவள் என்மனதைக் கொள்ளைகொள்ளுகினளோ, இந்த அழகிய ரூபங்கொண்ட அஷ்டையான இக்கன்னிகை யார்? என்று இந்திரதத்தனைக்கேட்டார். பட்டணத்தின் விருத்தாந்தத்தையறிந்த அவனேவெனில், பூர்ணமான சந்

திரன்போன்ற முகத்தையுடையவளான இவள், நமது உபாத்தியாயரின் தம்பியான உபவர்ஷரின் புதல்வி ஸகலமான மங்கைகளின் குலத்திற்குத் திலகம் போன்றவளும், மன்மதராஜனின் ஸௌந்தர்யத்தின் இல்லம்போன்றவளுமான இவள் மற்றொரு லக்ஷ்மிபோல் பிரகாசிக்கிருள் என்று அவரைப்பார்த்துச்சொன்ஞன். அதுமுதற்கொண்டு செய்யவேண்டிய மற்ற யாவையும் மறந்தவனுய், ஊமைபோலவும், ஜடன்போலவும், செவிடன்போலவும், குருடன்போலவும், அலைந்துகொண்டு அவளையே நினைத்தவனுய், அவள் மயமாகவே இவ்வுலகைப்பார்த்துக்கொண்டு, இரவுமுழுதும் விழித்தவண்ணமாய் இருந்தார். பிறகு சிரமப்பட்டு இரவுமுடிவதற்குப் பாதிசாமமிருக்கும்போது நித்திரையடைந்தவராய், கனவில் ஓர் தெய்வப்பெண்ணைக்கண்டார். அவளும் இவரைச்சமாதானப்படுத்தி "குழந்தாய், என்னை உனது சரீரத்தில் வாழ்ந்துவரும் ஸரஸ்வதியாக அறிந்துகொள். உனது மனோரதத்திற்கு லக்ஷ்யமாயிருக்கிற உபகோசையென்ற இவள் உனக்குப்பூர்வஜன்மத்து மனைவி, இப்பெண் இந்த ஜன்மத்திலும் உன்னையே ஆசைப்படுகிருள். மற்றவனை விரும்பவேமாட்டாள். ஆகையால் கவலைப்பட வேண்டாம்' என்று அறியப்படுத்திக்கொண்டே மறைந்தாள். விழித்துக்கொண்ட வாருசி உடனேயே மனைவியின் வீட்டினருகிலுள்ள சிறுமாமரத்தடியையடைந்தார். உபகோசையின் தோழிகளால் ஆதரவுடன் ஸம்பாஷிக்கப்பட்டு உள்ளே அழைக்கப்பட்டவராய், தன்னைக்குறித்தே மன்மதவேதனையனேகங்களை யநுபவிக்கும் உபகோசையையறிந்தும், பெரியோரால் கொடுக்கப்படாத குலகன்னிகையைத்தானுக கிரஹித்துக்கொள்ளும் துணிவை யேற்றுக்கொள்ளவில்லை. அவ்விதமான உபாயத்தைக்காட்டிலும், கீர்த்தியைவிரும்பும் விவேகிக்கு இறப்பதே நலம் என்றும் எண்ணினர்.

பிறகு மிக இளைத்தவளும் சூன்யமான மனத்தையுடையவளுமான பெண்ணைக்கண்டு வரலாற்றையறிந்த உபகோசையின் தாயார் கணவனுக்கும் அவர்முகமாக வர்ஷருக்கும் அறிவித்தாள். அவர்களாலும் சந்தோஷத்துடன் விவாஹம் நிச்சயிக்கப்பட்டபோது கௌசாம்பியிலிருந்து வியாடியால் அழைக்கப்பட்ட அன்

னையின் அநுமதியைப்பெற்று, வாருசி சுபமுகூர்த்தத்தில் அக்னி ஸாக்ஷிகமாக உபகோசையை பாணிகிரஹணஞ்செய்தார். தாயாரோடும் மனைவியோடும் அதேநகரத்திலும் சுகமாய் வஸித்தார்.

காலஞ்செல்லுகையில் வர்ஷோபாத்தியாயரின் கீர்த்தியால் திசைகள்யாவும் வியாபரிக்கப்பட்டன. சிஷ்யர்களின் பெருக்கு நாள்தோறும் அதிகமாயிற்று. வர்ஷரிடம் கல்விபயில்வதற்குவந்த மாணவர்களில் மிகவும் மந்தபுத்தியான பாணிநி என்ற ஒருவர் இருந்தார். குருவின் பணிவிடையால் கஷ்டப்பட்டவனும், மற்றவர்களால் அடிக்கடி பரிஹஸிக்கப்பட்டவனுமான அந்த மாணவனைக்கண்டு தயையால்நனைந்தமனத்தையுடைய வர்ஷரின்மனைவி 'குழந்தாய் பாணிநியே' இந்தவீண் சிரமத்தால் என்ன? தேவதையின் அனுக்கிரஹமில்லாமல் உன்னால் கல்விகற்க முடியாது. ஆகையால்செல், பார்வதீகாந்தனை சந்தோஷப்படுத்து" என்று உபதேசித்தாள்.

(தொடரும்)

கே. வி. சுப்பிரமணிய சாஸ்திரீ.

---

# கடன் செலுத்தக் கவலைவேண்டாமா?

கன்மபூமியாகிய இப்புண்ணிய பூமியில் நாம் பிறக்கும்பொழுதே மூன்று கடன்களுடன் ஜனிக்கிறோம். இம்மூன்று கடன்களையும் கொடுத்தவர்கள் மகரிஷிகள், தேவர்கள், பித்ருக்கள் இவர்களே ஆவார்கள். இவர்களுக்குக் கடன் கொடுப்பது எவ்விதமென்றால் முறையாக பிரும்மசர்யாச்ரமத்தாலும் பிறகு யாகம் செய்வதாலும், கிருஹஸ்தாச்ரமத்தில் புத்திரனைப் பெறுவதாலும் கடனை நிவிருத்திசெய்துகொள்ளலாம். பிரும்மசர்யம் என்றால் என்ன? பிரும்மமென்றால் வேதம். அதனை அப்பியாஸம் செய்வதற்குவேண்டிய விருதமும், லக்ஷணாவிருத்தியால் ஷஷ்டி சப்தத்திற்குப் பொருளாகும். சர்யமென்றால், ஏழுவயதில் உபநயனம் செய்யப்பெற்று, குருகுலம்சென்று நியமமாக சாஸ்திரங்களில்

சொல்லியபடி பன்னிரண்டு வருஷகாலம் அங்கங்களோடுகூடின வேதங்களைக் கற்பதேயாகும். கற்றுப் பிரதிதினமும் பிரும்மயஜ்ஞம், ஸமிதாதானம், பிக்ஷாடனம் முதலியது செய்தால் மகரிஷிகளின் கடனைச் செலுத்தினவனுவான். இவ்வாறு செய்யாமல் தனதிஷ்டப்படி ஒன்றும் படிக்காமல் வேறேதேனும் கேட்சொல்லிய விருதத்திற்குச் சிறிதேனும் உபயோகமில்லாத படிப்பைப் படித்து அதற்கு அனுகுணமான துராசாரத்தில் சிறுவயதிலேயே இறங்கினல் விரதத்தை நழுவவிட்டதுடன், கொடுத்த சாபத்தை நிறைவேற்ற வல்லமையுள்ள மகரிஷிகள் சாபத்திற்காளாகிறன்.

இரண்டாவது கடனைச்செலுத்தும் விதத்தை ஆராய்வோம். குருகுலமிருந்து விடைபெற்றுத் தன் குலத்திற்குப் பொருத்தமான கன்னிகையை மணம்புரிந்து, தருமநெறிதவருது பொருள் தேடித் தர்மபத்நியுடன் ஒளபாஸநம், அக்நிஹோத்திரம், ஜோதிஷ்டோமம் முதலிய பல யாகங்கள் செய்து அதனல் கடனைக் கொடுத்து தேவர்களுக்குச் சந்தோஷத்தை உண்டுபண்ணவேண்டும். இங்ஙனம் செய்யாது வேதம் பொய் என்றும், நான் செய்கிற புண்ணியபாபங்களை ஈச்வரன் மறந்துவிடுவாரென்றும், யமன் எங்குவரப்போகிறனென்றும், நான் சாச்வதனென்றும், எனக்கும் தேவர்களுக்கும் வெகுதூரமென்றும், அவர்களை இங்கழைத்து ஹவிர்ப்பாகம் கொடுத்து திருப்திசெய்வது அசாத்யமென்றும் சாஸ்திரங்களை எள்ளளவேனும் நம்பாது பொருள்களை வீண் செலவிட்டு ஐஹிகவிஷய சுகத்திலேயே ஆவலுற்றல் பரலோகத்திற்கதிபதிகளான அமரர்கள், நமக்குப் பரலோகத்தில் எற்படும் இன்பத்தைத் தடுப்பதுடன் இவ்வுலகிலும் இயன்றவாறு வியாதிகளையும், காரியவிகாதத்தையும் செய்வார்களென்பதில் ஐயமில்லை.

இதன்பின் மூன்றுவது கடனைக் கழிக்கும்வழியை கவனிப்போம். இக்காலத்தில் இக்கடனைச்செலுத்தாதவர்கள் மிகவும் குறைந்தவர்களே. ஆயினும், இவர்கள் சாஸ்திரீயமான முறையில் செலுத்தினவர்களாகமாட்டார்கள். ஆனல் எது சாஸ்திரீய முறையென்றல் தனது தர்மபத்நியிடம் ருதுகாலத்தில் சாஸ்திரங்களில் விலக்கப்படாத நல்ல தினங்களில்கூடிப் புதல்வனைப்

பெறுதலேயாகும். பிறகு நமது புதல்வனும் பித்ருதினங்களில் தர்ப்பணம், சிராத்தம், மஹாளயம், அஷ்டகை முதலான பைத்ருக கர்மாக்களை அனுஷ்டிக்கவேண்டும். இவ்விதம் அனுஷ்டித்தால், பித்ருக்கள் திருப்தியடைந்து க்ஷேமத்தைக் கொடுப்பார்கள். இதுபற்றியே காளிதாஸ மகாகவியும், ரகுவம்சகாவியத்தில் மூன்றாவது ஸர்க்கம் இருபதாவது சுலோகத்தில் ரகுபிறந்தவுடன் அரசாங்கமுறைப்படி காராகிருஹத்தினின்று கைதிகளை விடுவிக்க யத்தனிக்கும்பொழுது திலீபன் தான் சரிவர பரிபாலனஞ்செய்து வந்தபடியால் குற்றவாளிகள் ஒருவருமில்லை. ஆதலால் காராகிருஹத்தில் கட்டுப்பட்டவர்களுமில்லை. பின்னர் யாரை விடுவித்தானென்றால், வெகுகாலமாக பித்ருரிணத்தில் கட்டுப்பட்ட தன்னை தானே விடுவித்துக்கொண்டான் என்றும் ( प्रजायै गृहमेधिनां ) மணம்புரிதல் புதல்வனைப் பெறவே என்றும் கூறியுள்ளார்.

ஆகையால், பிராமணோத்தமர்களே, முன்சொல்லிய முக்கடன்களையும், மூன்று வகுப்பினர்களான மகரிஷிகள், தேவர்கள் பித்ருக்கள் இவர்களுக்குக்கொடுத்து இவர்களது அனுக்கிரகத்திற்கு ஆளாகுவோமாக.

K. A. கலியாணசுந்தர சாஸ்திரிகள்,
கோனுபட்டு.

---

# சிதம்பரத்தில் அத்வைத ஸபா.

குரோதன-ஹு சென்ற மார்கழி-ீ 15உ ஸ்ரீமதானந்தநடராஜமூர்த்தியின் ரதோத்ஸவதினத்தன்று மாலையில் 4 மணிமுதல் 7½ மணி வரையில் நடந்த ஸபா பூர்த்திவைபவத்தைக் கண்ணுற்கண்ட நான் அதை முழுமையும் வர்ணித்து எழுதச்சக்தியில்லாமலிருந்தும் ஏகதேசத்தையாவது பிரசுரப்படுத்தினுல்தான் நன்றியுள்ளவனுகுவேன் என்று எழுத ஆரம்பிக்கிறேன். ஏற்கனவே ஷ-ீ 7உ முதல் ஸபை ஆரம்பிக்கப்பட்டு காலைவேளையில் உபநிஷத்பாராயணமும் பிறகு மீனுக்ஷிஸம்ஸ்கிருதகாலேஜி

யில் லேகனரூபமான பரீக்ஷையும், நடந்ததுடன் மாலை 4 மணி முதல் 6 மணிவரையிலும் ஒவ்வொரு நாட்களிலும் சில நாட்கள் $6\frac{1}{2}$ மணி முதல் $8\frac{1}{2}$ மணிவரையிலும் அடியிற்கண்ட பிரஸித்த பண்டிதர்களால் பிர்ம்மஸூத்திரம் பாதம் பாதமாக மிகவும் அர்த்தகம்பீரத்துடன் உபந்யஸிக்கப்பட்டது. இதை பிர்ம்ம ஸத்திரம் (யாகம்) என்று வழங்கினர். உபந்யாஸம்செய்த மஹாபண்டிதர்கள் கும்பகோணம் ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் "பாஷ்யபாவக்ஞ" ஸ்மிருதி பூஷண பிர்ம்மஸ்ரீ ஸ்வா வெங்கிடராமசாஸ்திரிகள், சிதம்பரம் ஸம்ஸ்கிருதபாடசாலை உபாத்தியாயர் மணக்கால் பிர்ம்மஸ்ரீ ராகவசாஸ்திரிகள், (ச்ரௌதி) சேங்காலிபுரம் வைத்தினாத சாஸ்திரிகள், மதுரை ஸம்ஸ்கிருதகாலேஜ் பிர்ம்மஸ்ரீ ராமஸூப்பா சாஸ்திரிகள், போலகம் சுந்தரசாஸ்திரிகள், மல்லிக்கரை சுப்பிரமண்யசாஸ்திரிகள், ஸ்ரீ சிருங்கேரிமடம் ஆஸ்தான வித்வான் வெங்கிடராமசாஸ்திரிகள், மைலாப்பூர் ராமசந்திரதீக்ஷிதர், மஹாமஹோபாத்யாய பிர்ன்ஸ்பால் சிவதண்டபாணிஸ்வாமிதீக்ஷிதர், வேப்பத்தூர் சுப்பையாசாஸ்திரிகள், போலகம் ராமாசாஸ்திரிகள் சித்தூர் காலேஜ் பிரின்ஸ்பால் கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரிகள், ஜம்புகேச்வரம் வேதாந்தபாடசாலை விச்வனாதசாஸ்திரிகள், சித்தூர் காலேஜ் வைஸ்பிரின்ஸ்பால் பரமேச்வரசாஸ்திரிகள், மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸ்பால் மீமாம்ஸாரத்னம் மஹாமஹோபாத்தியாய வெங்கிடசுப்பாசாஸ்திரிகள். மேற்கண்ட வித்வான்களால் முறையே தினம் உபந்யஸிக்கப்பட்டும், 4-வது அத்தியாயம் 2ம் பாகத்தை ஸாக்ஷாத்தாக விவரிக்காமலும் பிரஸிங்கித்து, உபக்ரமித்த ஆஸ்தானவித்வான் அவர்களாலேயே சிறிது உபஸம்ஹாரம் செய்யப்பட்டது.

15உ காலை உத்தர சாந்திசெய்து எல்லோருக்கும் பிரஸாதம் கொடுக்கப்பட்டது. மாலை 4மணிக்கு தஞ்சாவூர் ஸப்ஜட்ஜி பிர்ம்மஸ்ரீ K. S. ராமஸ்வாமிசாஸ்திரிகள் அப்பொழுதே வந்து வரவேற்கப்பட்டு அக்கிராஸனம் வகித்தனர். உடனே எல்லா வேதாதிகளிலும் பிரஸங்கம் நடந்தது. அப்பொழுது கார்யதரிசி அவர்கள் சபையின் நடவடிக்கையை அழகாய் எடுத்துரைத்து ஸ்ரீகாஞ்சீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகளால்

முதல் இரண்டு கிளாஸில் தேருபவர்களுக்கு பரிசளிக்கும்படியாகக் கொடுத்தனுப்பியுள்ள இரண்டு பனாரீஸ்பட்டுகளை சபையோர்களுக்கு தெரிவித்தும் ஸ்ரீசிருங்கேரிஜகத்குரு மஹாஸ்வாமிகளால் தங்கள் ஆஸ்தான வித்வான் மூலமாய் அனுப்பியுள்ள ரூபா 75. யும் தெரிவித்து இந்த ஸபை மேன்மேலும் விருத்தியாவதற்கு இதுவே சுபஸூசனம் என்றும் கூறி அமிருதமொழியாக பிரஸங்கித்தனர். பிறகு அக்ராஸனர் அவர்கள் கையினாலேயே ஸ்ரீநடராஜமூர்த்தியின் பிரதிநிதியான ஷை உத்ஸவ ஆசார்யருக்கு ஸம்பாவனையும் மற்றுமுள்ள எல்லா பண்டிதர்களுக்கும் சம்பாவனையும் நடந்தது. வேதாந்த பரீக்ஷையில் முதலில் தேறின சிவராமகிருஷ்ணசாஸ்திரிகளுக்கும் இரண்டாவதான சிவராமசாஸ்திரிகளுக்கும் ஸ்ரீமடம் அனுக்கிரகரூபமான பனாரீஸ் பரிசளிக்கப்பட்டது. பரீக்ஷைக்குவந்த வித்யார்த்திகளுக்கும் உசிதப்படி வெகுமானம் செய்யப்பட்டது. அச்சமயம் அங்குவந்திருந்த பிராம்மண சமூகமும் பண்டித பரிசயமும் இந்திர ஸதஸ்ஸென்றே கூறலாம். பரிசுகள் அளிக்கப்பட்ட பிறகு அக்ராஸனர் எழுந்து தான் அக்ராஸநம்வஹித்த காரணத்தையும் இவ்விதம் அத்வைத பிர்ம்ம ஸத்திரம் நடத்தவேண்டிய அவசியத்தையும், இதனால் ஆத்மோன்னதியுடன் தேசக்ஷேமம் உண்டாகுமென்பதையும் இதற்கு பக்தியாகிய தாயைக் காப்பாற்றினால் ஞான வைராக்கியக் குழந்தைகள் செழித்துவரும் என்றும் சுமார் 1½ மணி நேரம் ராமாயணம் பாரதம், பாகவதம், வஸிஷ்டராமாயணம், மாலதீமாதவம், சாகுந்தளம் முதலானவைகளிலிருந்தும் மேற்கோளுடன் அமிருதவருஷமாய்ப் பொழிந்தனர்.

பிறகு இச்சபையில் பிரகிருத விஷயத்திற்சேராத "கர்மயோகம்" எனப் பெயரிட்ட சுமார் 300 அனுஷ்டுப் ச்லோகமுள்ள ஓர் வியாஸம் மதுரை காலேஜ் பிர்ன்ஸ்பால் பச்சையாம்பேட்டை சுந்தரசாஸ்திரிகள். B. A. அவர்கள் ஸயன்ஸ்களை திருஷ்டாந்தமாகக் காட்டித் தற்கால நிலைமையை விளக்கி சபையோரை ஆனந்தக்கடலிலாழ்த்தினர். ஷை சாஸ்திரிகள் முதன் முதல் அரங்கேத்துவதற்காகவே இந்நகரைநாடி இச்சபையைத்தேடி தன் ஞானசக்தியை வெளியிட்டனர்.

பிறகு சபையோர்களுக்கு சந்தனம் தாம்பூலங்கள் வழங்கி இனிமையாய் சபை பூர்த்திநடந்தேறியது. ஸ்ரீநடராஜாதர்சனார்த்தமாயும் வேதபாராயணார்த்தமாயும் சென்றிருந்த நான் இடையிடையே கிடைத்த அவகாசத்தில் இச்சபையை தரிசித்துக் கண்காணித்தவிஷயத்தை தெரிவித்து இத்துடன் பூர்த்திசெய்கிறேன்.

வீ. உமாமகேச்வர சாஸ்திரி.

---

# திருநாவுக்கரசர்.

திருநாவுக்கரசர் சைவசமயாசாரியார் நால்வருள் ஒருவர். இவர் திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வேளாளர்குலத்திலே குறுக்கையர் குடியிலே தோன்றியவர். இவரது தந்தையாரின் பெயர் புகழனார் என்பது. தாயாரின் பெயர் மாதினியார் என்பது. இவ்விருவரும் இவரது இளமையிலேயே இறந்துவிட்டனர். திருநாவுக்கரசரது பிள்ளைத்திருநாமம் மருள்நீக்கியார் என்பது. இவருக்குத் திலகவதியார் என்ற ஒரு மூத்த சகோதரியார் உண்டு. அத்திலகவதியார் தமது மணாளராகக் குறிக்கப்பட்ட கலிப்பகையார் இறந்துவிட்டமையின் தாம் கலியாணத்தை விரும்பாமலேயே துறவுபூண்டிருந்தனர். மருள்நீக்கியார் திலகவதியாரால் பெரிதும் போற்றி வளர்க்கப்பட்டார். திலகவதியார் மருள்நீக்கியாரைக் காப்பதற்கென்றே உயிர்தாங்கி இருந்தார்.

இங்ஙனமாக மருள்நீக்கியார் உரியகாலத்தில் சகல கலைகளையுங் கற்றார்; பலவகைத் தருமங்களையும் செய்துவந்தார்; உலக வாழ்க்கையின் நிலையற்றதன்மையை உணர்ந்தார்; சமணமதத்தை உயர்வாகக் கருதினார்; அந்த மதநூல்களைக்கற்றார்; தகுந்தகாலத்தில் அந்த மதத்தலைவராகவும் ஆனார்; தருமசேனர் என்ற சிறப்புப் பெயரினையும் பெற்றார்.

மருள்நீக்கியார் இவ்வாறு சமணரானமையைக்கண்ட திலகவதியார் தமது வழிபடுகடவுளாகிய திருவதிகை வீரட்டேசரை

வழிபடுவாராயினர். ஒருநாள் அவர் "எனது தம்பியை உனது அடியானுக்கிக்கொள்ளலாகாதா" என்று வீரட்டேசரை வேண்டினர். வீரட்டேசர் திலகவதியாரின் கனவிலேதோன்றி "உனது தம்பி முன்னைத் தீவினையின்பயனை அநுபவிக்கிறான்; அவனைச் சூலைநோய்க்கு உள்ளாக்கி ஆட்கொள்வோம்" என்று கூறிமறைந்தார். திலகவதியாரும் மகிழ்ந்தனர்.

அங்ஙனமே தருமசேனருக்குச் சூலைநோய் தோன்றிற்று. இது 'பிறந்த நற்சமயத்தைவிட்டு வேற்று மதத்திற் புகுந்ததன் பயன்' என்பதை உணர்ந்தார்; திலகவதியாரை அடைந்தார்; அவருடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினார். திலகவதியார் தம்பியைப்பார்த்து 'இது சிவபிரானுடைய திருவருளே; அவரையே பற்றுக்கோடாகக்கொண்டு வணங்குவீராக. எல்லாம் நன்றாகமுடியும்' என்று கூறிப் பஞ்சாட்சரத்தை ஓதி விபூதியைக் கொடுத்தார். மருள்நீக்கியார் பெருமகிழ்ச்சியுடன் வணங்கி வாங்கி அணிந்துகொண்டார்; தமக்கையாருடன் ஆலயத்துக்குப் போனார்; வீரட்டானேசரை வலமாகவந்து வணங்கினார். ஆண்டவனது அருளால் தமிழ்ப்பாக்கள் தோன்றின. தமது சூலைநோய் நீங்கும்பொருட்டும், சொல்லுகின்றவர்களுடைய துன்பங்கள் நீங்கும்பொருட்டும் "கூற்றாயினவாறு விலக்கிலீர்" என்றதொடக்கத்தினையுடைய திருப்பதிகத்தைப் பாடியருளினார். சூலைநோயும் நீங்கிற்று. வீரட்டானேசரைப் போற்றிப் புகழ்ந்தார். "எம்மீது மதுரமான தேவாரப்பதிகத்தைப் பாடினமையின் உனக்குத் 'திருநாவுக்கரசு' என்னும் பெயர் வழங்குக" என்ற ஓர் அசரீரி தோன்றிற்று. அனைவரும் கேட்டுமகிழ்ந்தனர். திருநாவுக்கரசர் மனம், மொழி, மெய்களால் அன்புடன் திருத்தொண்டினைச் செய்யலுற்றார். (தொடரும்.)

தண்டமிழ்த் தொண்டன்.

---

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.